## சாம்பல் வார்த்தைகள்
### இந்திரன்

கத்தியோடு ஒருவன் வருகிறான். அவனைப் பார்த்து எதிரே வந்தவன் நடுங்க, கத்தியோடு வந்தவன் தன் வயிற்றில் தானே கத்தியால் குத்திக்கொள்ள, எதிரே வந்தவன் அதிர்ந்து நிற்கிறான். இது கோடார்ட் இயக்கிய படத்தில் ஒரு காட்சி. இப்படிப்பட்ட அதிர்வலைகளை நம்மில் ஏற்படுத்தும் வார்த்தைகள் தான் இந்திரனின் 'சாம்பல் வார்த்தைகள்'. விமர்சகராகவும், மொழி பெயர்ப்பாளராகவும் அறியப்பட்ட இந்திரனின் இன்னொரு முகம் கவிதை. தமிழோடு ஆங்கிலத்திலும் கவிதை எழுத கைவரப் பெற்றவர். அந்நியன், முப்பட்டை நகரம் தொகுதிகளைத் தொடர்ந்து வந்திருக்கும் மூன்றாவது தொகுப்பு இது. ஒரே ஒரு நீண்ட கவிதையே ஒரு சிறிய புத்தகமாக வந்திருக்கிறது. ஹைக்கூவின் பெயரால் ஆட்டுப் புழுக்கைகளைப் போல் தமிழ்க்கவிதை துக்கினியூண்டு, துக்கினியூண்டாய் தோற்றம் தரும் அவலப்பொழுதில், மூன்றாம் உலகில் இருந்து எழுப்பப்படும் தமிழ்க்குரல் எப்படி இருக்கவேண்டுமோ, அத்தனை உக்கிரமாய், உள்முகம் கொண்டதுவாய் இருக்கிறது என்பதற்கு உதாரணமாய் இந்திரனின் இந்த நெடுங்கவிதை இருக்கிறது. இந்திரனின் முந்தைய தொகுதிகளை விடவும் இந்தக் கவிதை தன் கதவுகளைத் திறந்து, அதன் ஆழங்களுக்கு அழைத்துச் செல்கிறது. இன்று புத்தகரூபம் கொள்ளும் நிறைய கவிதைகள் வாசகனை உள்நுழைய விடாத தடைச் சுவர்களாகி விடுகின்றன. இந்திரனுக்கு, கடவுள் ரயில் நிலையப் படிக்கட்டில் ஒரு பிச்சைக்காரனாய், தனக்கு கிடைத்த எச்சில் காசுகளை வாரி இறைக்கும் மனநிலை தப்பியவனாய் தெரிகிறார்.

கம்ப்யூட்டர் யுகத்தில் மனிதன் வெறும் எண்களாகி விட்டான். எல்லாம் எண்ணிக்கைதான். CODE WORDSதான். அதன் மதிப்பைப் பற்றி கவலை இல்லை கம்ப்யூட்டருக்கு. பாதத்தின் கீழிருந்து பூமி பிடுங்கப்பட்டு, நாடற்றவர்களாக உலகப் படமெல்லாம் சிதறிக் கிடக்கும் மனிதர்களை கம்ப்யூட்டர் கணக்கு வைத்திருக்கிறது.

''140 இலட்சம்
மனித உடல்கள்
தலைகளற்று உலவுகின்றன''

இதில் நம் சொந்த சகோதரர்கள், ஈழத்துத் தமிழர்களும் அடக்கம்.

அகதிகள் மரணத்தின் மூச்சுக்காற்றை
பிடறியில் உணர்ந்தபடி ஓடுகிறார்கள்.

இது உலக அளவிலான மனித அவலம். சரி, நம்மூர் இந்திரனின் பார்வையில் எப்படி விரிகிறது? பல கோடி ரூபாய்க்கு நலத் திட்டங்கள் காற்றில் அறிவிக்கப்படுகின்றன. கோப்புகளின் கீழே ஒவ்வொரு முதல்வர்களின் கையெழுத்துக்களின் கீழே இன்னொரு புதிய முதல்வர் கையெழுத்திடுகிறார். அவ்வளவுதான், காகித ராஜாங்கம். ஆனால் அவர்கள் பாடு கொண்டாட்டம்தான்.

நம்மூரில்
கண்ணை கூசவைக்கும்
வீடியோ வெளிச்சத்தில்
நகம் முளைத்த நாவுகளோடு
பெரிய மனிதர்கள்
பசித்த மானிடத்துக்கு
வார்த்தைகளை உண்ணக் கொடுக்கிறார்கள்
விளம்பரங்களின்
இசை வார்த்தைகளில்
(இந்தி உச்சரிப்போடு)
பொய் சொல்கிறது
என் தமிழ்.

நம் தமிழ் சோப்பு - பேஸ்ட் வியாபாரிகளின் கைகளில் சிக்கி, சோரப்படுத்தப்படுவதை, நம்மை 'உஜாலா'விற்கு மாறச் சொல்லி நச்சரிக்கும், அவலத்தை, நம் இருப்பை கேள்வி கேட்கிறது. 'நகம் முளைத்த நாவுகளோடு பெரிய மனிதர்கள்' என்பது விசேஷமான வரி. லூயி புனுவலின் சர்ரியலிசப் படிமங்களைப் போல் இருக்கின்றன. இந்திரனின் பல வரிகள்.

**யாளி பதிவு வெளியீடு, 8, கார்ப்பரேஷன் காலனி, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம் சென்னை-24. விலை ரூ. 15/-**

- பாரதி